கிழக்கின் பேரொளி

# புலவர்மணி

நூலாசிரியர்—
சதா. நவரெட்ணராஜா

பதிப்பாசிரியர்:
ஈழத்துப்பூராடனார்

பதிப்பகம்
ஜீவா பதிப்பகம்
பிரதானபாதை — தேற்றாத்தீவு
களுவாஞ்சிகுடி — இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கின் பேரொளி

# புலவர் மணி

பண்டிதர் . ஏ. பெரியதம்பிப்பிள்ளை
அவர்களின் வாழ்க்கை வரலாறு

நூலாசிரியர்

**சதா-நவரட்ணராசா** (குருநகர்க்குமரன்)

பதிப்பாசிரியர்

**ஈழத்துப்பூராடனார்**

பதிப்பகம்

**ஜீவா பதிப்பகம்**

பிரதானபாதை — தேற்றாத்தீவு
களுவாஞ்சிகுடி — இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு விபரம்:
1ம் பதிப்பு . 8 . 1 . 1980.
புலவர் மணி:

ஆசிரியர்: சதா. நவரட்னராசா. (குருநகர்க்குமரன்)

பதிப்பாசிரியர்: ஈழத்துப் பூராடனூர்.

அச்சகம்: மனோகரா அச்சகம்.
தேற்றாத்தீவு— களுவாஞ்சிகுடி.

புத்தக அளவு: டிமைஒன்பதிலொன்று

விலை: ரூபா.

வெளியீட்டு இல: 48

ஜீவா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கின் பேரொளி

# புலவர் மணி

பண்டிதர் . ஏ. பெரியதம்பிப்பிள்ளை
அவர்களின் வாழ்க்கை வரலாறு

நூலாசிரியர்

**சதா-நவரட்ணராசா** (குருநகர்க்குமரன்)

பதிப்பாசிரியர்

**ஈழத்துப்பூராடனார்**

பதிப்பகம்

**ஜீவா பதிப்பகம்**

பிரதானபாதை — தேற்ருத்தீவு
களுவாஞ்சிகுடி — இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பு விபரம்:
1ம் பதிப்பு . 8 . 1 . 1980.
புலவர் மணி:

ஆசிரியர்: சதா. நவரட்னராசா. (குருநகர்க்குமரன்)

பதிப்பாசிரியர்: ஈழத்துப் பூராடனர்.

அச்சகம்: மனோகரா அச்சகம்.
தேற்றாத்தீவு— களுவாஞ்சிகுடி.

புத்தக அளவு: டிமைஒன்பதிலொன்று

விலை: ரூபா.

வெளியீட்டு இல: 48

ஜீவா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூல்



கல்வி என்னும் ஒளி காணக்
கதிரோன் போலச்சுடர்விட்டே
நல்ல — வல்ல மாணவரை
நாற்று நட்டு வளர்த்தெடுத்த
செல்வக் குருக்கள் மடந்தனிலே
சீர்மிகு மெதடிஸ்த மிசன்பள்ளி
நல்கா நின்ற கல்வியினால்
நானும் மனிதனாகிநின்றேன்

உருவம் பெயர்கள் மாறினாலும்
உள்ளத் தன்பு மாறுது
திருவும் கல்வியும் செறிந்திடவே
செல்வப் பதியின் கருவாக
மருவிநின்ற மிசன் பள்ளி
மாண்பு மனதில் கல்வெட்டே
திருவளர் புலவர் மணிபுகழைத்
தேக்கினோம் அதற்குக்

**காணிக்கை,**

கி. தா. செல்வராஜகோபால்.

பதிப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிப்பகத்தாருரை

வணக்கம்

1968ம் ஆண்டில் எங்களது 33வது வெளியீடான "துரோபதை அம்மானை"யில் மட்டக்களப்புப் பெருமக்கள் நூல் வரிசையை வெளியிட இருப்பதாகவும், அதில் முதலாவது சாண்டோ சங்கரதாசின் வரலாற்றை இரும்பரசன் எனும் பெயரிலும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வரலாற்றைப் "புலவர்மணி" என்றபெயரிலும் வெளியிட இருப்பதாக அறிவித்திருந்தோம். அதன்படி "இரும்பரசனை" வெளியிட்ட நாங்கள் இப்போது "புலவர் மணி" நூலை வெளியிடுகின்றோம். பெருமிதப்படுகின்றோம்.

48வது வெளியீடான இந்த நூலை எங்களின் நூல் வெளியீட்டு ஊக்குவிக்குந் திட்டத்தின் கீழ் வெளியிடுகின்றோம். மட்டக்களப்பு எழுத்தாளர்களை நூலாசிரியர்களாக்குவதும், மட்டக்களப்புப் பிரதேசத்தின் தனித்தன்மையையும், தமிழகக் கருவூலங்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் நூல்களை வெளியிடுவதுமே எங்கள் சீரிய நோக்காகும்.

அச்சகத்தில் சில பல வசதியீனங்கள் இருப்பதால் நூலைத் திறம்பட அச்சுப்பதிவு செய்யமுடியாதுள்ளது. இது கடந்த சூறாவளியினால் ஏற்பட்ட விளைவு. இதனை நிவர்த்தி செய்து விரைவில் தரமான அச்சுப்பதிவுடன் எங்கள் நூல்களை வெளியிடுவோம்.

இந்த "தமிழ் அறிஞன்" புகழ் கூறும் புத்தகத்தை உங்கள் இதயங்களில் தவழ விடுகின்றோம்.

இவ்வண்ணம்

இதயவாசம் — எஸ். அல்பட் இதயமனோகர்
தேற்றாத்தீவு — நிர்வாகி
களுவாஞ்சிகுடி—இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



புலவர்கள் வரலாற்றினை அன்னாரின் ஆக்கங்கள் மூலமும், அவர்கள் வாழ்ந்த காலகட்டத்தின் மூலமும், அக்காலகட்டத்தில் வாழ்ந்த பிறரின் குறிப்புகள் மூலமும், அறியக்கிடக்கின்றது. புலவர் மணியின் வரலாறு இம்மூவகையாலும் அறியக் கூடியதாக நிலைபெற்றுள்ள வேளையில் எனது முயற்சி அற்பமானதொன்றாக இருக்கலாம் என்பது எனது எண்ணம்.

எனினும் புலவர்மணியின் சரிதத்தை தற்போதுள்ள சந்ததியினர் அறிந்திருப்பது போல வருங்கால உலகத்தினரும் அறியவேண்டுமெனுமாசையால் இம்முயற்சியிலீடுபட்டேன்.

இதனைக் கைப்பிரதியின் நிலைக்குக் கொண்டுவர மிகவும் பிரயத்தனப்பட்டேன். சிலர் திருத்தினர். சிலர் நல்யோசனைகளை கூறினர். சிலர் சில புதுச் செய்திகளைத் தந்தனர். எனவே இதனை கைப்பிரதி நிலையிலே ஏறக்குறைய பத்துத்தடவை மாற்றிப்-புதுக்கி எழுதினேன். இதுஒரு பெருஞ் சோதனை.

அடுத்த சோதனை நூலுருவில் கொண்டு வருவதாகும். நிதித்தட்டுப்பாடு நந்தியாய் நின்றது. ஒருபுத்தகத்தை வெளியிடக் கூடிய மூலதனம் என்னிடமில்லை. பலரிடம் வேண்டினேன். புத்தகத்தை வெளியிடுவதற்குரிய தொகையில் பத்திலொன்று தானும் என்னால் திரட்டமுடியவில்லை. காலம் கரைந்தது. கொப்புத்தேனைக் கண்ட முடவனானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் மணியுடன் மிகவும் நெருங்கிப்பழகினேன். அவரின் பேரன்பு எனக்குண்டு என்னும் எண்ணம் என்னை மேலும் முயற்சி எடுக்கத் தூண்டிற்று. இதன் பலனாக திரு. க. தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனாரைக்) கண்டேன். எனது ஆசையை விட்டேன். புலவர் மணியுடன் தனதுஇளம் பராயத்திலிருந்து மிகவும் ஈடுபாடு கொண்ட அவர் எடுத்த எடுப்பிலே ''இதைப் புத்தகரூபத்தில் கொண்டு வருவோம்,, என்றார். மனம் மகிழ்ந்தேன்.

ஆகும் செலவில் பத்திரிகைக் காசாவது திரட்டிஎடு என்றார். கையெழுத்துப்பிரதியை, வாங்கிக் கொண்டார். அப்படியே ஆயிற்று. இது இறைவனின் சித்தம்.

இம்முயற்சியை ஊக்கி ஆக்கம் தந்த அன்பர்களுக்கு மனமார்ந்த நன்றி, வேண்டியபோது வேண்டிய தகவல்களைத் தந்த புலவர்மணியின் மருகன் திரு சி. குமாரசாமி வீ. ஏ. அவர்கட்கும் அவரின் குடும்பத்தாருக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தநூலில் வேண்டிய திருத்தங்களைச் செய்து நூலினை முழுமையுறச் செய்த ஈழத்துப் பூராடனாரின் சேவையை என்னால் என்றும் கூறமுடியாது.

அன்னை ஒருத்தி ஈன்றெடுத்தாள் - தமிழ்
அன்னை என்னை வளர்த்தெடுத்தாள்
முன்னை என்னை முயல வைத்தாள் - தமிழ்
முனிவன் புகழைக் கூற வைத்தாள்
ஏடும் கோலும் ஏந்த வைத்தாள் - என்
இதயந்தனிலே எண்ணந் தந்தாள்
நாடு புகழும் புலவர்மணி - நல்
வாழ்வின் சரிதம் வரைய விட்டாள்
அன்னை தமிழே நீவாழி உன்
அடியான் கீதை தந்தானை
என்னைப் போலொரு ஆள் புகழ்தல்
இரவிமுன் எழுதிரி ஒளி போன்மே

வணக்கம்

கிருஷ்ணன் கோயில் வீதி
குருக்கள்மடம்
10. 12. 76.

சு. தா. நவரெட்ணராசா
(குருநகர்—குமரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உரை

இது; எனது 'நன்றிக் கடன்' நான்கற்ற பாடசாலையில் வடகிழக்கு மூலையில்; ஒரே எல்லையுடையதாக புலவர்மணி பண்டிதர். ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் இல்லம் அமைந்திருந்தது. பாடசாலைப் பொருட்களைப் பத்திரமாக வைப்பதற்கென்று தனது பெரிய இல்லத்தில் ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். எனவே எங்கள் பாடசாலை அவருடைய இல்லத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது.

குருக்கள்மடம் மெதடிஸ்த மிசன் பாடசாலை அப்போது சிரேஷ்ட பாடசாலையாகவிருந்து மாணவர் இன்மையால் ஆரம்ப பாடசாலையாகத் தரங்குறைக்கப்பட்டிருந்தது. இங்கு மேல் வகுப்புகள் வைக்க முயன்று வெற்றிகண்டவர் பண்டிதர் அவர்களும் அப்போது கிராமத்தலைமையாக இருந்த த. வல்லிபுரம் அவர்களுமாவர். எனினும் 1944இல் எட்டாந்தரத்துக்குமேல் தரமுயாத்த கல்வி அதிகாரியின் சிபாரிசுதேவை. அதைப்பண்டிதர் அவர்கள் பெற்றுத் தந்தார்கள், கனிஷ்டபாடசாலையாயிற்று. 1945இல் சிரேஷ்டபாடசாலையாக்க முயன்றார். அப்போது அதற்குத் தகைமை பெற்ற மாணவன் நான்மாத்திரமே. ஆசிரியர்களும் அலுத்துவிட்டனர். ஒருமாணவனை வைத்து வகுப்பு நடத்த முடியாதென்றனர். எனினும் அவர் அப்போது கல்வி அதிகாரியாக இருந்த திரு சரவணமுத்து என்பாரை அழைத்துவந்து என்னைக் கூப்பிட்டுக் காட்டி இவர் பத்துமாணவர்க்கு நிகர். சிரேஷ்ட வகுப்பு நடாத்த அனுமதி கொடுங்கள் என்றார். அவரின் வேண்டுகோளுக்கு எவ்வதிகாரியும் தடை சொல்லார். எனவே வகுப்புத் தொடர்ந்தது. அவர் உயர்த்திய தரம் பின்பு மங்கவே இல்லை. அதனால்முதற்கனி பெற்றவன் நான்.

பின்னேரங்களில் கடற்கரைக்கு உலாவப் போவார். நாங்கள் பின்தொடர்வோம். நடக்கும் போதே தமிழ்க்காப்பியத் தென்றல் வீசும். தமிழ் இலக்கணச் சாதனை நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய வீட்டில் நாங்களாகவே வலிந்து சென்று சிற்றுள் வேலை செய்வோம். வேலை செய்யும்போது எங்களுடன் அவரும்கூட வேலைசெய்வார். வேலைசெய்து கொண்டே பாடம் நடக்கும்.

பாடசாலையில் பின்னேர வகுப்பு நடக்கும். அவர் வருவார். மாணவர்களாகிய எங்கள் பக்கத்தில் அமர்ந்து கொள்வார். அங்கு பாடம் நடக்கும். ஆசிரியர் வாசிக்கப் பண்டிதர் விளக்கந்தருவார்.

நகைச்சுவை, சிலேடை ததும்பப் பேசுவார். அவர் படித்தவர்களுக்கு ஒருவிதமாகவும், பாமரர்களுக்கு ஒருவிதமாகவும் பேச மாட்டார். அவருடைய பேச்சு எப்போதும் எல்லோருக்கும் விளங்கக்கூடியதாகவே இருக்கும்.

தும்பைப் பூப்போல எந்நேரமும் தூய வெள்ளை ஆடை அணிந்து கம்பீரமாக நடப்பார். பத்திரிகைகளுக்கு எழுதும் கட்டுரைகளை- கவிதைகளைத் தன்கைப்படவே எழுதுவார்.

எந்தநேரமும் அவரைக்காண பலதரப்பட்ட மக்கள் வருவார்கள். அவர்களோடு அவர் சம்பாஷிப்பதைக் கேட்டாலே பலகாப்பியங்களைக் கற்கும் அறிவுவரும். விசேடமாகக் காலஞ்சென்ற முன்னுள் செனட்டர் அல்ஹாஜ் ஏ. எம். ஏ அசீஸ் அவர்கள் வருவார்கள். சித்திரப்பாவையாக அமர்ந்து இருக்கு பண்டிதர் அவர்கள் இலக்கியச் சிந்தனைகளைச் சித்திரிப்பார் நாங்கள் கேட்டுச்சுவைப்போம்.

அவரை யாவரும் அறிவார்கள், அதுபோல அவரும் யாவரையும் அறிவார்.

அவரின் சிபாரிசினுல் உத்தியோகம், உத்தியோக உயர்வு பெற்ருேர் ஆயிரமாயிரம் பேர். தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டோர் ஆயிரம் ஆயிரம் பேர். மற்றவர்களின் கஷ்டத்துள் அவர் தம்மை முற்றாக ஒப்புக் கொடுத்துவிடுவார். அவரின் மாணுக்கர் ஆயிரமாயிரம்பேர் இத்தகைய சிறப்புப்பெற்றவர் அவர். அவரையிட்டு ஒருநூலை ஆக்கமுன்வந்துள்ள திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா. நவரெட்ணராசா மேலும் முயன்று அவரின் விரிவான வாழ்க்கைக் குறிப்புகளை கவிதைகளை, கட்டுரைகளை, பேச்சுகளை மதிப்புரைகளை எல்லாந் திரட்டி நூலுருவில் வெளியிட முன் வரவேண்டும்.

அருட்திரு விபுலானந்த அடிகளாரின் ஆக்கங்களை வெளியிட்டு அருள் செல்வநாயகம் தமிழகமெங்கும் மதிக்கும் அளவுக்கு எழுத்தாளரானார். அதுபோல புலவர்மணியின் ஆக்கங்களை வெளியிடுவதன்மூலம் சதா நவரெட்ணராசா தமிழகம் மதிக்கும் எழுத்தாளராவது நிச்சயம். இறைவன் அருள் பாலிப்பானாக. அன்பர்கள் வாசகர்கள் தங்கள்வசமுள்ள புலவர்மணி பற்றிய செய்திகள், அன்னாரின் கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை எங்களுக்கு அனுப்பினால் அவற்றைத் திரட்டி வெளியிட ஒரு முகப்படுத்தி உதவும் பணியைச் செய்வோம்.

நூலை எழுதுவது இலகு ஆனால் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்பதோ மிகவும் கடினமானது. வாசகர்கள் எதைவிரும்புவார்கள் என்பதை தீர்மானிக்கும்போதுஎழுத்தாளனுடன் முரண்படநேரும்' உண்மை எது என்றறிந்து திருத்தும்போது யாவருடனும் முரண்படநேரும். எனவே நூலாசிரியர் தவறவிட்டவற்றை பதிப்பாசிரியர் சேகரித்துத் தொகுக்கவேண்டும். இப்பாரிய பொறுப்பை புலவர்மணியின் மேலுள்ள பேரன்பினால் நான் ஏற்றுக்கொண்டேன். இதன்பிரகாரம் மதமாற்றம் பற்றிய விபரத்தை அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரித்தறிய நேரிட்டதுபோல ஒவ்வொரு விசயத்திலும் சிரமமெடுக்க வேண்டிவந்தது.

ஏனையபுலவர்கள், பண்டிதர்கள் போல் அல்லாமல் இவர் மிகவும் சமூகசேவைகளில், | பலமுனைகளில் ஈடுபட்டிருந்ததால் இவர் ஈழநாட்டில் பலஇனததவர்களுக்கும் உற்ற நண்பனாக மாத்திரமல்ல மிகவும் அறிமுகமானவராகவும் வாழ்ந்தார். அப்படிப்பட்ட ஒருவரைப்பற்றிய வாழ்க்கை வரலாறு பல்லாயிரக் கணக்கான பக்கங்களில் வெளியிடப்பட வேண்டியதொரு நூலாகும். எனவே இச்சிறுநூல் அவரைப்பற்றிய சிறுபிரசுரமேயன்றிவேறல்ல.

—ஈழத்துப் பூராடனார்.—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

1 . பதிப்பு விபரம்
2 . இந்நூல் காணிக்கை
3 . பதிப்பகத்தாருரை
4 . முன்னுரை
5 . பதிப்பாசிரியர் உரை
6 . உள்ளடக்கம்
7 . நூல்

1 . கிழக்கின் சுடர்
2 . வளரும் பயிர்
3 . காவியப் பூஞ்சோலை
4 . மனமாற்றமும் மதமாற்றமும்
5 . அடியாருக்கு அடிமை
6 . ஆசிரியப்பணி
7 . தமிழ்ப்பணி
8 . சமூகப்பணி
9 . நீங்காத நினைவுகள்

மட்டக்களப்புப் பெருமக்கள் நூல்வரிசையில்
எமது அடுத்தவெளியீடு ''ஈழத்து இரட்டையர்கள்'
செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவர்,
சின்னவைப்புலவர் என்போரின் வரலாறு-பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊக்கஉரை

இந்நூல் கைப்பிரதியாக இருக்கும்போது, இளம் எழுத்தாளரான இவரின் பணியை ஊக்குவிக்குமுகமாக புலவர்மணியின் மீது பேரன்பு பூண்டவர்களான பின்வரும் அன்பர்கள் அளித்த ஊக்க உரைகள் இவை;

''வாழும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்,, என்பது போல் திரு சதா— நவரட்னராசா அவர்களுக்கும் ஓர் நல்ல எதிர்காலம் உண்டென்பதற்கு இச்சிறுநூல் சான்றாகும்,,

சா . ஆறுமுகம்— அதிபர்
கலைவாணி வித்தியாலயம்— குருக்கள்மடம்

கடமையுணர்ச்சியும் சுறுசுறுப்பும் மிக்க இளைஞரான— சதா . நவரட்னராசா அவர்களின் ''புலவர்மணி,, என்னும் நூல் புலவர்மணி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்மட்டுமல்ல—மட்டக்களப்பு வரலாற்று நூலுங்கூட.

எஸ். எஸ். ஜீவராசன்
கட்டிடப் பரிசோதகர் பெரியகல்லாறு

காலத்தில் நிலைக்கும் கருவூலர் கதையினை
ஞாலத்தின் தந்த சதா நவரெட்ணராசா
சீலத்தால் ஆளாவார்.—

திரு. க. தங்கவேலாயுதன்-(சைவப்புலவர்)
பகுதி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள்மடத்தில் இருபண்டிதர்கள் வாழ்ந்தார்கள்—அவர்களில் ஒருவர் புலவர் புலவர்மணி- மற்றவர் பண்டிதர்-சப சதாசிவ ஐயர் இவரின் புதல்வனே -சதா நவரட்னராசா ஒருபண்டித மணியின் வரலாற்றை மற்றப்பண்டிதரின் புதல்வர் எழுதுவது சாலப் பொருந்தும்.

திரு. இ. கந்தசாமி ஜே.பி. (சட்டத்தரணி,
இந்து விருத்திச்சபைத் தலைவர்

பல சிறப்புகளமைந்த தமிழ்ச்சுடரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரின் சிறப்புகளையும் தமிழுலகம் அறியச்செய்வது மிகப் பொருத்தமானது.

அதிபர் . க. மயில்வாகனம்
கிரான்குளம் அரசினர் வித்தியாலயம்.

புலவர்மணி அவர்களின் வரலாற்றை நம் பிற்சந்ததியினரும் அறிய வழிக்கால சதா. நவரெத்தினராசா முயன்று - வெற்றி கண்டுள்ளமைக்கு இந்தநூல் ஒரு அத்தாட்சியாகும்.

சைவப்புலவர் - த. சாந்தலிங்கம்.
அதிபர் - குருக்கள்மடம்

கறந்தாவின் பாலொடு கற்கண்டு கனிசேர்த்து
நறவோடுண்டாற் போல் நனிது சுவை தரவே
தம்பி .சதா. நவரட்ன ராசாவே நீ தந்த
சிறந்த புலவர் மணி சீரியவரலாற்றைச்
செப்பும் இந் நூலென்றும்
திகழ்ந்திடவே வாழ்த்துதுமே—


கவிஞர்— ஞானமணியம்

புலவர்மணியின் அளத்தற்கரிய பெருமையை இச்சிறுநூலில் அடக்க முயன்று வெற்றிகண்ட சதா நவரட்னராசா பாராட்டுக்குரியவர். துணி கரமிக்க இவர் முயற்சி எதிர்காலத்தில் எழுத்துத்துறையில் பல முன்னேற்றங்களைத் தருவதாக

சு. நவரெட்னம் ஆசிரியர்
குருக்கள்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி பண்டிதர்,
ஏ.பெரியதம்பிப்பிள்ளை



மாநிலத்தில் பிறந்தது.
08.01.1899.

பரமபதம்சேர்ந்தது.
02.11.1978.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் மணி.



## 1 கிழக்கின் சுடர்,

ஈழத்தின் கிழக்கிலே பேரொளிவீசிய விபுலானந்த அடிகளாருக்குப் பிறகு அவரது பணிகளுள் தமிழையும், சைவத்தையும் காக்கும் பணிகளை இதுவரை ஏற்றுத் திறம்படப் புரிந்து வந்தவர், புலவர்மணி பண்டிதர் ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

தேனுடான மட்டுமாநகரின் தென்பால் குருக்கள் மடத்திலே இல்லறவாழ்வில் நல்லறங் கண்டு இன்பத் தமிழில் பேசி, இதயம்மகிழ உறவாடி கற்றோர் கல்லாதோர் யாவரும் விளங்கக்கூடிய இனிய தமிழிலேஅரிய விசயங்களைப் பேசிப் புரிய வைத்த தமிழ் மணி எம்மை விட்டுப்பிரிந்து விட்டார்.

ஆனால் அவரதுபுகழுடனும் ,அவர் விட்டுச் சேறிய தமிழ்ச் சொற்செல்வங்கள், சமய சேவைகள், சமூக சேவைகள், என்பன அப்பிரிவு உணர்ச்சியை எமது மத்தியில் ஏற்படுத்தவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பூவுலக வாழ்க்கையில் மொழி, மதம், கலை, கலாச்சாரம், சமூகம் என்பவற்றில் தனது முத்திரைகளைப் பதித்து மதுரகவி, வெண்பாவேந்தன், பண்டிதமணி, சைவமாமணி, புலவர்மணி, கவியரசு, ஏழைபங்காளன், இளைஞர்களின் தலைவன், கற்ருேர் போற்றும் தமிழ்மகன்' எல்லாமதத்தவரும் மதிக்கும் இனியவன் என்ற சொற்ருெடர்களால் உருவான ''தமிழ்ப்பா'' போன்ற சுவையீந்து, அரசியல் தலைவர்களாற் கூட அரசியல் ஆற்றல் மிக்கோன் எனப்போற்றப்பட்டு வாழ்ந்து, மறைந்தது புலவர்மணியின் பூதஉடம்பன்றி வேறன்று.

புலவர் மணி வாய்ப்பட்டு தமிழ் செந்தமிழாயிற்ருே! கைபட்டு கன்னித் தமிழாயிற்ருே! கருத்திற்பட்டு பைந்தமிழாயிற்ருே! என்று அறிஞர் வியக்கும் வண்ணம் தமிழின் உருவாக' உணர்வாக, உயிராக உலகில் உலவி, மறைந்தும் மறையாத மாமணியாக தமிழ் உருவெடுத்து நிற்கின்ற மாமேதையின் மேதா விலாசத்தினை மட்டிட எப்பட்டத்தால் முடியும்.

பரமாத்மா பார்த்தனுக்குக் கீதையை வடமொழியிற் செப்பினுன். புலவர்மணி அதனை இன்தமிழில் இயம்பினுர். இதைச்செவிமடுப்பினினிமேல் கண்ணன் கன்னித் தமிழில்தான கண்ணனுக்கு உபதேசிப்பார். எனுமளவுக்குக் கீதையின் கீதமாக, கீதையின் பொருளாக, மங்காப்புகழுடன் துலங்கும் புலவர்மணியின் புகழின் எல்லை வரையறுக்க முடியாத தொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2 வளரும் பயிர்

‘பெற்றார் இவர் அமுதை; பேறுபெற்றது வையகமே’ எனுமளவிற்குப் பெற்றார் சிலர், அவருள் புலவர்மணியின் பெற்றாரும் பெற்றார் எனும் பேறு பெற்றவரே யாவர். தமிழ்பேசும் நல்லுலகில் தெற்கு எல்லையான ஈழத்தின் கிழக்குக் கரையோரம் மீன்பாடத் தேனொழுக ,மிடற்றொலியால் மாதர்குரவையிடு மட்டக்களப்பாம் இயற்றமிழ் நாட்டில் ஈழத் தில்லையம்பதி என அழைக்கப்படும் மண்டூர் எனும் ஒரு தலம் உண்டு. இங்குறைபவன் தந்தைக்கு உபதேசித்த முருகன். அவ்வாலய பரிபாலகருள் ஒருவராயிருந்த தமிழறிஞருஞ் சைவவேழிர் மரபின்படி வாழ்ந்தவருமான ஏகாம்பரப்பிள்ளையின் இல்லக்கிழத்தியாக அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தங்கம் என்பவர் வாய்த்தார். ஏகாம்பரனுக்கு உபதேசித்த கந்தன் அருளால் ஏகாம்பரன் தன்மதலையாக தமிழைப்பெற்றார். அந்தத்தமிழிற்கு அவரிட்ட பெயர் பெரியதம்பி. அந்தத் தமிழிற்கு பால் அமுதூட்டினார் சின்னத்தங்கம் அம்மையார் என்பதிலும் பார்க்க தமிழமுது ஊட்டினார் என்பதே சாலப் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தோன்றிற் புகழொடு தோன்றுக,, என்று கூறிய வள்ளுவர் வழியில், வளமார் இல்லறந்துய்த்து வாழ்ந்த இத்தம்பதிகள் 1899ம் ஆண்டு தைமாதம் எட்டாந் திகதி ஈழஞ்சிறக்க, இனிய தமிழ் உய்ய பெருமையுடன் பெரியதம்பி ஏனும் மகவை ஈன்றீந்து புகழ் கொண்டனர்.

விளம்பி ஸ்ரீ மார்கழித் திங்கள் இருபத்தைந்தாந் தினமான இத்தினத்திலே ஈழத்தின் கிழக்கில் எழுந்த இரு தமிழ்க் கதிர்களுள் ஒருகதிரான விபுலானந்த அடிகளாருக்கு ஏழாண்டிளையாராக புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அடுத்த கதிராகத் தோன்றினர்.

''விளையும் பயிரை முளையிலே,, தெரியுமெனுங் கூற்றுக்கியைய இவர் தனது பாலவயதிலே தந்தையாருடன் மண்டூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்குச் செல்லுந்தோறுந் தேவார திருவாசகமாதியவற்றைக் காதாற் கேட்டு மனனஞ் செய்து வாயால் இனிமை சொட்டப் பாடும் வல்லபமுடையராக இருந்தார். ''தாயைப் போல பிள்ளை,, என்பதற்கியைய தாயார் சின்னத்தங்க அம்மையாரின் ஒழுக்க சீலங்களும் தந்தையாரின் பண்பும் கல்வியுமிவரிடை செறிந்து வந்தன.

அக்காலத்தில் ஆங்கு வித்துவான் சந்திரசேகரம் பிள்ளை எனும் உபாத்தியாயராற் திண்ணைப் பள்ளி ஒன்று நடாத்தப்பட்டு வந்தது. இப் பள்ளியிற்றான் சிறுவன் பெரியதம்பிப்பிள்ளை தனது ஆரம்பக்கல்வியைக் கற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரப்பாவை போற் றன்னுசிரியர் முன்னமர்ந்து அன்னப்பட்சிபோல் நற்றமிழைக் கற்ருர். முன்குடுமி, காதில் மின்னி, கழுத்திற் காறை, வெள்ளை ''உறக்கூசு'' எனுமாடையினுலான சிறு வேட்டி அணிந்து திண்ணைப்பள்ளிக்குத் தன்மகனை அனுப்பி அழகுபார்த்த தனது தாயாரை இக்காலகட்டத்துள் காலன் வாய்கொடுத்துத் தவித்தார்.

மேற்படி ''திண்ணைப்பள்ளி,, இவருடைய வீட்டிலேயே நடந்து வந்தது. சின்னத்தங்கமம்மையாரது மரணத்திற்குப்பிறகு இப்பள்ளி நடைபெருது தடங்கலுற்றது. இவரது கல்வியுந் தடைபட்டது.

இவ்வேளையில் சில அறிஞர்களது நல்லாலோசனையுடன் திரு. ஏகாம்பரப்பிள்ளை வண்ணக்கர் தனது மகனது கல்வியைக் கல்முனை மெதடிஸ்த மிசனரி—ஆங்கிலப்பாடசாலையிற் தொடரத் தக்கதாக ஒழுங்குகள் செய்தார். இவ்வொழுங்கு பசியுற்ருெருவனுக்கு உருசியான உணவு கிடைத்ததுபோல் பெரியதம்பிப் பிள்ளை அவர்களது கல்வி வேட்கைக்குக் கற்பகத் தருவாக அமைந்தது.

1917ம் ஆண்டு இவரது கல்விமுயற்சியில் வேறெரு திருப்பமுமேற்பட்டது. யாழ்ப்பாணந் தம்பிமுத்து என்பார். புத்தக வியாபாரியாக மண்டூர் வருவதுமிவர் வீட்டிற் தங்குவதுமுண்டு. அன்னூர் யாழ்ப்பாணத்து விவகாரங்களை அங்குகூறுவ வழக்கம். அவர் விற்பனைக்குக் கொண்டுவருகின்ற புத்தகங்களை ஆவல் நிறையப் படித்துவிடுமித் தமிழ்ச்சிறுவனின் தமிழார்வம் அவரை வெகுவாகக் கவர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 காவியப்பூஞ்சோலை

''கண்டது கற்றுல் பண்டிதனுவான்,, என்பது மூதுரை. இதன் பலாபலனை அந்தப் புத்தக வியாபாரி நன்கு அறிந்திருந்தார். எனவே தமிழார்வமும் பசியுங் கொண்ட பெரியதம்பிப்பிள்ளையை தக்காரிடத்துச் சேர்க்க நினைத்தார். அக்காலத்தில் திண்ணைப்பள்ளியில் ஆரம்ப அறிவும், காவியப் பாடசாலையில் முதிரறிவுமூட்டப்பட்டு வந்தன. இத்தகைய காவியப்பாடசாலை ஒன்று யாழ்ப்பாணம் — நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்று வந்தது. இறைவன் திருச்சித்தத்தால் திரு. தம்பிமுத்துவினுலும் ''இந்து சாதனப்,, பத்திரிகை மூலமும் இதையறிந்த தந்தையார் பெரியதம்பிப்பிள்ளை எனுந் தமிழ்ச் சிறுவனை யாழ்ப்பாணமனுப்பிவைத்தார்.

யாழ்ப்பாணஞ் சென்ற இவருக்கு — உரையாசிரியர் வேற்பிள்ளையின் இளையமகனுன நடராசா என்பாரினுதவி கிடைத்தது. இவர் மூலமாக காவியவகுப்பில் சேர்ந்தார். கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இவருடன் மாணுக்கராஞர். குமாரசாமிப் புலவர், திரு. கயிலாயப்பிள்ளை என்பாரிவருக்கு ஆசிரியர்களாய் அமைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காவிய வகுப்பில் கற்குங்காலத்தில் விபுலானந்தரெனப் பின்னல் புகழ்பெற்ற பண்டித மயில்வாகனஞர், பண்டிதர் மகாலிங்கசிவம் என்பாரின் நட்பும் தமிழமுதும் பெற்ருர். தந்தை மகற்காற்றுமுதவியாக முந்தியிருக்கச் செய்த ஏகாம்பரம்பிள்ளை அவர்கள் இவன் தந்தை என்னேற்ருன் எனுமளவுக்கு; கற்ருேர் வியக்குமாறு பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் காவிய வகுப்பிற் திறமையுடன் திகழ்ந்து' செந்தமிழ்ப் பரிபாலன சபையாரின் பரீட்சைக்குத் தோற்றி பண்டிதர் எனும் சிறப்புடன் பண்டிதர் பெரியதம்பியாஞர் தமிழ்க்காவியப் பூஞ்சோலையில் உல்வி, தமிழ்த் தென்றலில் மெய்சிலிர்த்து, பத்துப்பாட்டு எட்டுத்தொகை எனும் மலர்த் தருக்களின் மணம் நுகர்ந்து, காப்பியங்களின் தேனருந்தி மகிழ்ந்த பண்டிதர் பெரியதம்பிப் பிள்ளை 1921ம் ஆண்டு மண்டூரை வந்தடைந்தார். என்னும் தொழில் வசதியீனங்காரணமாக மீண்டும் யாழ்நாடு சென்ருர். அங்கே நுணுவில் அமிர்தாம்பிகை சைவ வித்தியாசாலையில் ஆசாஞஞர். சாவகச்சேரி இந்துவாலிபர் சங்கக் கட்டிடத்திற் தங்கியிருந்து ஆசிரியப்பணி புரிந்த இக்காலத்துள் அப்பகுதியிற் கொடிய நோய் பரவிற்று. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சேரிகளில் இந்நோயின் தாக்கமதிகரித்தது. தீண்டப்படாதவரென ஒதுங்கித் தொண்டர்கள் சேரிப்பக்கமே சென்ருர்களில்லை. இதஞல் மனமுடைந்த பண்டிதர், சில்லரையும் கூட்டிக்கொண்டு தொற்று நோய்ப்பயமும் தீண்டாமை நோயச்சமுமின்றிச் சேரிகளில் புகுந்து சேவை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சமுதாயத்தில் நிலவி வரும் சாதிப்பாகுபாடுகளையும், தாழ்த்தப்பட்டோர் மிருகங்களிலும் மோசமாகக் கணிக்கப்டுவதையுங் கண்ட பண்டிதர் நொந்த சித்தையினரானார் பசுவுக்குப் பூச்சூடி, பொட்டிட்டு பொங்கல் செய்யும் தமிழினம் தன்னைப் போலொத்த உருவமும், தசையுமிரத்தமுங் கொண்ட மனிதர்களை தாழ்த்தப்பட்டவரென்று தள்ளி வைத்தொதுக்குவதைக் கண்ட அவரின் இதயம் அழுதது. மலமுண்ணுங் குணமுடைய வளர்ப்பு நாய்கூட வீட்டுள் நுழையும் அருகதையுடன் இருப்பதையும் அப்படிப்பட்ட வீடுகளில் தீண்டத் தகாதோர் வேலிப்புறத்தே கைகட்டி வாய்பொத்தி நிற்பதையுமொப்பிட்டுப் பார்த்த பண்டிதரின் பண்புள்ளம் பதறிற்று.

மனித சமூகத்தின் மாத்திரமல்ல இறைவனின் சந்நிதியிற்கூட அவர்கள் புகத் தடைசெய்யப்பட்டிருந்த அவலநிலை கண்ட அவர் நாயன்மார், ஆழ்வார்களின் வரலாறுகள்கூட இம்மக்களின் வாழ்க்கையில் ஏதும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையே என்று கலங்கினார். பல அறிஞர்கள், பெரியார்கள், சமயகுரவர்கள் என்போருடன் கலந்துரையாடினார். அதன் பேறாக அவர் கண்டது ''தீண்டாமை ஒரு தகர்த தெறிய முடியாத கன்மலை,, என்பதுதான்.

இதை எப்படியும் உடைத்தெறிவேன். மனிதர் மனிதராக வாழ ஒரு வழி பிறக்குமட்டுமோயமாட்டேன் என உறுதி கொண்டவராக அதற்கான வழிவகைகளை ஆய்ந்தறியத் தொடங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4 மனமாற்றமும் மதமாற்றமும்,

ஓடங்கவிழ்ந்து ஆற்றில் விழுந்து தத்தளிப்பானுக்கு ஒருபலகையாவதுகைக்கெட்டுமென்றால் அவன் அதைக் கைப்பற்றிக் கரையேறுகின்ற வழியையே கணிப்பான். சைவசமயத்தில் தீண்டாமை எனும் புழுமலி நோய் பொங்கி எழுந்தபோது அதைத் தடை செய்யாவிடில் தமிழர் சமயமான சைவம் நலிந்துவிடும் நிலையுஞ் சைவக்கொள்கைளுக்கு அழிவுமேற்படும் குறிகளும் எண்ணத்தில் தைத்துக் கொண்டேயிருந்தன. சைவம் நலியுமானால் தமிழரின் தனிப்பண்பாடும் நலியுமென்பது அவரின் திட்டமான நம்பிக்கை.

எப்படித்தான் சிந்தித்துச் செயலாற்றினாலும் அக்காலச் சமுதாயம் அவருடைய முற்போக்குக் கொள்கைகளுக்கு முட்டுக்கட்டையிட்டுக் கொண்டேயிருந்தன. இவ்விடத்தில் இதை எழுதும் எனது, தந்தையாரின் வாழ்க்கையை நினைவுகூர்கின்றேன்; அது வாசகர்களுக்கு ஒரு புதுத்தெளிவை ஆக்குமென்பது என் எண்ணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய தந்தையார் யாழ்நாட்டவர். பிராமண குலத்தவர் ச. சதாசிவஐயர் எனும் பெயருடையவர். பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். பண்டிதப்பட்டத்தினர். ஆயினுமவர் மெதடிஸ்தராக வாழ்ந்தவர் இவர் அவ்வாறு மதம்மாறிய காரணம் புலவர்மணிக்கு ஏற்பட்ட மனநிலையேயாகும், புலவர்மணியின் மதப்புரட்சியிலும் பார்க்க எந்தையாருடைய மதப்புரட்சி வலுவானது. தீவிர எதிர்ப்புகள், குடும்ப பராம்பரிய கௌரவம் என்பவற்றைத் தகர்த்து எதிர்த்து நிற்கவேண்டியநேர்ன்ருக இருந்தது. இதனுல் இவர் தனது செல்வாக்கு மிக்க குடும்பத்தவரிடமிருந்து பிரிக்கப்பட்டார். வாழ்நாள் முழுவதும் இதனுல் ஏற்பட்ட தாக்கதனைச் சுமந்தார். எனினும் தனது புரட்சி மற்றவர் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதென்றே கருதினுர்.

இவ்வாறுதான் தீண்டாமை — சாதிக்கட்டுப்பாடுகள் அவ்வளவு இறுக்கமில்லாத மட்டக்களப்புப் பகுதியில் இருந்து யாழ்நாடு சென்ற பண்டிதர் அவர்கட்கு இத்தீண்டாமை எனும் சமூகத்தினைப் பிடித்திருந்த தொழுநோய் சைவத்தின் சீரிய கருத்துகளை வேரறுக்கும் ''வைரஸ்,, போன்றிருந்ததில் வியப்பில்லை.

இதனுல் மன உழைவு ஏற்பட்ட அவர் அக்காலத்தில் சைவத்துடன் போட்டியிட்டுப் பரம்பிவந்த கிறிஸ்துவ மத அமைப்புகளை நோக்கினுர், அங்கே அவர் தேடித்திரிந்த தீண்டாமை நோய்க்கு மருந்து இருப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தைக் கண்டார். கிறிஸ்தவசமயக் குரவர்களோடு கலந்துரையாடியதினுல் அவ்வழியிலே நின்று தமிழர் சமுதாயத்திற் பீடித்துள்ள இந்த தீண்டாமையை அகற்றலாம் என்று கருதினர்.

இந்த மனமாற்றம் இவரை மதமாறச் செய்தது. இக்காலத்தில் யாழ்நாட்டில் சைவம், சங்கீதம், தமிழறிவு என்பவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்தவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருமான திரு ஆறுமுகம் என்னும் அறிஞருடன் ஒட்டுறவாடியதைக் கண்ட இந்து வாலிப மன்றத்தினர் அருவருத்தனர். மேலும் திரு ஆறுமுகம் பரமபதமடைந்த காலைகுலம் பாராது குணம் பார்த்து நட்புறவு கொண்ட இவர் ஒரு கையறுநிலை பாடினர். இந்த நிகழ்ச்சி மேலும் அருவருப்படைந்தவர்களுக்கு வெகுளியைக் கொடுத்து எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு அச்சபைச் செயலாளராக இருந்த திரு சிவகுரு முதலியார் செயற்பட்டு இவரில் நடபடிக்கை எடுத்தார்.

இந்த நிகழ்ச்சியும்; இவரின் ஆற்றலிலும் புரட்சி மனப்பான்மையிலும் திருப்தி கொண்டிருந்த கிறிஸ்தவச்சபையினரின் ஈடுபாடும் இவரை மதம் மாறச் செய்தது.

இவரின் செயற்பாட்டில் பல ஆக்கபூர்வமான புரட்சிகளைக் கண்ட கிறிஸ்தவச் சபையினர் இவரை போதகர் நிலைக்குத்தயார்படுத்தப் பசுமலை வேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்திரக்கல்லூரிக்குஅனுப்பினார்கள். இந்தியாவில் உள்ள கல்லூரியில் இவர் கற்றபோது பல கிறிஸ்தமத தோத்திரக் கீர்த்தனைகளைப் பாடினார். திரு அவதாரக் கீதங்கள், 'குருபரத் தரிசன வேட்கை, கிறிஸ்தவசபை யின் துயிலுணர்ச்சி என்பன குறிப்பிடத் தக்கனவா கும்.



# 5 அடியார்க்கு அடிமை

பசுமலையில் இவரது புத்திசாதுரியத்தையும் புல மைத்தன்மையையும் கிறிஸ்துமதக் கொள்கைகளை அமுலாக்கும் திறமையையும் கண்ட கல்லூரித் தலை வர் இவரைப் பல பொறுப்புள்ள பதவிகளில் கருமமாற் றச் செய்தார். இதனால் அவர்பல அனுபவங்களைப் பெற் றார். அங்கு எதைத் தேடிவந்தாரோ எந்தத் தீண்டா மைப்பேயை அடித்தோட்ட முயன்றாரோ அது வேறு வேறு வடிவத்தில் அக்காலக் கிறிஸ்தவ சபையினுள் ளும் தாண்டவமாடுவதைக் கண்டார், இதனால் மனம் மிக நொந்தார். தனது மதமாற்றத்தால் கூட ஏதும் பயன் விளையாமல் போய்விடுமோ என்று மனங்கவன் றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர் - கறுப்பர் - காற்சட்டை அணிந்தவர் வேட்டி உடுத்தவர் என்ற வித்தியாசத்தில் கிறிஸ்தவ சபையில் தீண்டாமை வேறு வடிவில் உருக்கொண்டதையும் அது ஆங்கில மொழிமூலம் அதிகாரம் செலுத்துவதையும் கண்டார். பசுமலை வேத சாஸ்திரக் கல்லூரியிற் கூட புசிக்க உபயோகிக்கும் பாத்திரங்களும் தீண்டாமை நிழலிடுவதைக் கண்ட இவர் மனம் புழுங்கினார். எங்கும் பரந்துள்ள காற்றுப் போல இத்தீண்டாமை வியாபித்திருப்பதையும் சில இடங்களில் தனிக் கரியமில வாயுவாக இருப்பதையும் மற்ற இடங்களில் பிராணவாயுவுடன் கலந்திருப்பது போலவும் தீண்டாமையின் கொடூர ஆட்சியைக் கவனித்தார்.

அவ்வேளையில் சமூகத் தொண்டாற்றும் மூளைப்புக்கு ஏற்ற தீனி கிடையாமல் தனது புதுமதத்தின் மூலமுங்கூட தீண்டாமைக்கு மருந்து காணமுடியாதென்பதையுணர்ந்தார். இதனைச் சமயத்தால் சரிப்படுத்த முடியாது. எனக்கண்ட பிஞ்சு மனது ஊசலாடிற்று.

இவ்வேளையில் தமிழ்ப்பண்டிதரான சுப்பிரமணிய சர்மா என்பவர் மூலம் தனது உறவினரும் இலங்கை மட்டக்களப்புக் காரைதீவைச் சேர்ந்தவருமான சுவாமி விபுலானந்த அடிகளாரின் சொற்பொழிவின் சுவை வியப்பைக் கேட்டறிந்தார். அந்தமிழ்ச் சொற்பொழிவுகளைச் செவிமடுக்குமாசையால் உந்தப்பட்டு மதுரைச் தமிழ்ச்சங்க பிரமுகர்கள் தங்கியிருக்கும் சத்திரத்துக்கு பால்நினைந்தூட்டும் பசுவை நாடும் கன்றெனப்பண்டிதர் வந்து அடிகளாரைக் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பெற்ற நெருக்கமான உறவு மீண்டும் தளிர்த்தது. அவரின் நல்லுபதேசங்கள் தமிழ் பற்றிய உரையாடல்கள் என்பனவற்றுல் புலவர்மணி அவர்கள் ஒரு புதுத்தெளிவு பெற்ருர்.

தொண்டு செய்யவும் தீமையை ஒறுக்கவும் எந்த நிலையிலிருந்துங் கூட பணியாற்றலாம். என்பதை உணர்ந்து கொண்ட அவர் கிறிஸ்தவப் போதகராக இருந்து சமூகப்பணி செய்வதிலும் பார்க்கச் சாதாரண மனிதனுக இருந்து அதிகமாகச் செய்யலாமென்பதையும் மனுசனுக்குச் செய்யும்பணியே மகேசனுக்குச் செய்யும் பணியென்பதையுமுணர்ந்து சிலமுடிவுகளை எடுத்தார்.

அந்த முடிவுகளை எடுப்பதற்கு, எந்தமொழி அடிமைப்படுத்துகின்ற மொழியாக இருந்ததோ எந்த மொழியை வெறுத்தாரோ அந்த மொழியில் உயர் தரச் சித்தி, போதகர் பரீட்சைக்கு முக்கியமானதாக இருந்தது. இந்தத் தாக்கத்திஞல் ஏற்பட்ட திருப்பம் கிறிஸ்தவ திருச்சபைக் கட்டுப்பாட்டிலிருந்து விலகிக் கொள்ள இலகுவாக இருந்தது.

விபுலானந்த அடிகளாரின் துணையும் ஆசியும் பெற்ற இவர் 1626ம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பி திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரியில் ஆசிரியராஞர். இக்கல்லூரி இராமக்கிருஷ்ண மடத்தின் நிர்வாகத்திலிருந்தது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் உள்ள சாதி வேறுபாடுகளை வெறுத்த இவர் இங்கு பணியாற்றும் போது மகாத்மாகாந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றுபவரானூர். இதே யாண்டு காந்தியடிகள் இலங்கைக்கு வருகை தந்த போது அவரைச்சந்தித்து வரவேற்புபசாரப் பத்திரம் வாசித்தளிக்கும் பேறுபெற்றூர்.

இக்காலத்திற்றூன் இவரின் ''பாலசரிதம்'' எனும் சீவகன்சரிதம் நூலுருவில் வெளிவந்து.



## 6 ஆசிரியப்பணி,

1926ம் ஆண்டில் குருக்கள் மடம் எனுமூரில் (இதனைக்குருநாதர் மடம் என்றுமழைப்பர்.) சைவ வேழாள குடும்பத்தில் நல்லம்மாள் எனும் மங்கையைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு நான்கு ஆண்மக்களாக தருமலிங்கம், சாந்தலிங்கம், சிவலிங்கம், (விஜய ரெத்தினம்) சத்தியலிங்கம் என்போர் பிறந்தனர். எல்லாம் ஆண்குழந்தைகளாகவேஇருந்ததால் சந்தானம் பெருக ஒரு இலட்சுமியில்லையே என்று மனங் கவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூர்க்கு ஒரு பெண்மகவு கிட்டிற்று. இதற்குச் சந்தானஇலட்சுமி எனப்பெயரிட்டு மகிழ்ந்தனர் இவருக்குச்சகோதரியாக தனஇலட்சுமியையும் இரண்டாவது பெண்மகவாகப் பெற்றனர்.

தருமம்- சாந்தம்- சிவம்- சத்தியம்— சந்தானம் தனம் எனும் நாமகரணத்தின் மூலமே புலவர்மணியின் தெள்ளிய பண்பாடும், வேத, ஆகமஅறிவும் புலனுகின்றது.

அதுமாத்திரமல்ல அவருடைய குணத்தில் சாந்தமும் வாக்கில் சத்தியமும் கிரியைகளில் தருமமும் உள்ளத்தில் சிவமும் உறவில் சாந்தமும் வாழ்க்கையில் தனமும் கொண்டு வாழ்ந்தார்.

இவரின் மக்களுள் சாந்தலிங்கம் என்பார் மாமாங்கப்பதியில் நீராடுகையில் பரமபதமடைந்தார். ஏனையவர்கள் அவர்காட்டியவழியிலே பலரும் மதிக்கத்தக்கவர்களாக வாழ்ந்து வருகிருர்கள்.

இப்படி தனது இல்லத்தில் நல்லறந் தோய்ந்த புலவர்மணியவர்கள் தனது வாழ்க்கைக்குப் வருவாய் தரும் தொழிலாக ஆசிரியப்பணியை மேற்கொண்டார். திருமணத்தின் பின் திருகோணமலையிற் கடமையாற்றுவது சிரமமாக இருக்கவே மட்டக்களப்பில் அர்ச் அகஸ்தீன் ஆசிரியகலாசாலையில் தமிழ்விரிவுரையாளராகக் கடமையாற்றி அதன்பின் அர்ச் சிசிலியா மகளிர்கல்லூரியில் தமிழ் ஆசானுய் ஆனுர்.

இவையெல்லாம் தனது வாழ்வுககுத்தக்க வருவாயைக் கொடுக்காதபடியால் தனது தாயகமான மண்டூரில் உபதபாலதிபர் தவியை ஏற்றுக்கொண்டார்.

பசுவுக்கு எவ்வாறு மாமிசம் ஒவ்வாதோ அதேபோல இவருடைய தமிழறிவுக்கடலில் உபதபாலதிபர் பதவி கரையிலொதுங்கும் நுரையாயிற்று. கற்பனைவானில் சிறகடித்துப் பறந்து தமிழ்க்காப்பியங்களில் தன்முதத்திரையைப் பதிப்பிக்கும் பண்டிதரின் வல்லபம் ஒருசிறு அறைக்குள் அடைந்து தபால்முத்திரைகளில் தபால்கந்தோர் முத்திரையைப் பதிப்பது ஒவ்வாதவொன்றாகஇருந்தது

இதனால் இவர் மீண்டும் ஆசிரியப்பணிக்கே திரும்பினார். அர்ச் அகஸ்தீன் ஆசிரியபயிற்சிக் கலாசாலையின்தமிழ் போதனைபீடம் அவரை வரவேற்றது. ஆங்கு கற்பிக்கும்போது இவரது இமயமொத்த ஆற்றலையும்தமிழ் வல்லபத்தையும் கணித்த அந்நாள் வித்தியாதிபதி திரு கே.எஸ் அருணந்தி அவர்கள் இவருக்கென்று ஒருவிசேட பதவியும் சம்பளநிலையும் வகுத்து அவரைக் கௌரவப்படுத்தி மட்டக்களப்பு அரசினர் உயர் பாடசாலையில் தமிழ்ப் பண்டிதராக நியமித்தனர். இதற்கு முன்னாள் அமைச்சர் திரு வீ. நல்லையா அவர்களின் அனுசரணையும் இருந்தது. இக்கல்லூரியில் இவர் ஓய்வுபெறும்வரை பணியாற்றி அனேக, தமிழில் வல்ல மாணவர்களை உருவாக்கினார். இவரின் மாணக்கர் எத்துறைல் கடமையாற்றினாலும் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருப்பினும் தமிழில்—தமிழிலக்கியத்தில் வல்லுனராயும் ஆர்வமுள்ளவர்களாயுமிருப்பர். அதுமாத்திரமல்ல தமிழ்ப் பேச்சாளராகவுமிருப்பர். ஆங்கிலமோகமுற்று தாய்மொழிமீது பாசங்கொள்ளச்செய்த இவரின் ஆசிரியப்பணி காலத்துக்கேற்ற ஒரு சேவையாக அமைந்தது, தமிழன்னை பெற்ற பாக்கியமே.

இவருடைய ஊதியத்தைப் பெருக்க அக்காலத்திருந்த அரசாங்கம் அவருக்கு பால்விநியோக மேற்பார்வையாளர், நெற்கொள்வனவுக்கட்டுப்பாட்டுக் காவலர்களின் மேற்பார்வையாளர், யுத்தகாலக் கரையோரக் காவலர்களின் மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளைக் கொடுத்து இவரின் கம்பீரம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடான சேவையைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7 தமிழ்ப்பணி,

புலவர்மணி பேச்சில் வல்லவர். வெண்பாப்புலி கவியரசு இசையுடன் கவிகளை இயைப்பதில் வல்லவர். அவருடைய வசனநடை தெளிவும் அழகுமுடையது. கவிதைகளோ காலத்துக்கேற்ற புதுக் கருத்துகளுடன் சங்கத்தமிழின் இனிமையும் உவமையும் கலந்தின்பம் நல்குவன. ,,சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது'' என அறிஞர்களால் போற்றப்பட்டவர்.

,தான் பெற்ற இன்பம் வையகம் பெறுக' எனும் மனப் பரப்புடையவர் இவரது தமிழ்ப்பணி இப்பண்பில் விளைந்ததேயாகும். எத்துறையிலுந் தமிழ்ப்பணி யாற்றியவர் இவர் ஆசிரியப்பணி, சமூகப்பணி சமயப்பணி, அரசியற்பணி இலக்கியப்பணி என்பவற்றின் மூலந் தமிழ் வளர்த்த பெருமை இவருக்குண்டு.

இவரின் மாணாக்கர்களை இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம் ஒன்று நல்ல பேச்சாளராக இருப்பர். அல்லது கவிஞராக இருப்பர். வேறொருவகையில் எழுத்தாளராக, அல்லது இம் மூன்றுவகையிலும் தேர்ந்தவராக இருப்பர். இம்மூன்று துறையிலும் முடியாதவர் தமிழ் நூல்களை ஆர்வத்தோடு கற்பவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாக இருப்பர். அத்தகைப்பணியை அவர் ஆங்கிலப் பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்குப் புரிந்தார். காற்சட்டைக் காரனிவன் இவனுக்கு எங்கே தமிழிலக்கணம் தெரியப்போகிற தென்று யாராவது இவரது மாணுக்கரிடம் வாய்திறந்தாற் போதும் உடனே. பண்டிதரின் முத்திரை பதிந்துவிடும். இத்தகையது இவரின் ஆசிரியப்பணிமூலம் தமிழ் வளர்த்த பெருமை.

கருவிலே திருவுடையாராக வாழ்ந்த புலவர்மணி தனது சமூகப்பணிமூலம் தமிழ்ப்பணி செய்தார். மட்டக்களப்புப்பிர தேசத்தில் மாத்திரமல்ல அகில இலங்கை ரீதியாக எந்தச் சமூக முன்னேற்ற முயற்சிகள், இயக்கங்கள் ஆரம்பித்தாலும் அவற்றிலே அவரது அங்கத்துவம் இல்லாதிராது. கல்வி, சுகாதாரம், கிராம சமூக முன்னேற்றம், சமூகத் தாழ்வுப்பாடுகள், பொதுநிலையங்கள் என்பவை சம்பந்தமான எல்லா வியக்கங்களிலும் இவரது நல்லாலோசனைகளுக்காக அதை ஆரம்பிப்பவர்கள் அவ்வியக்கங்களின் முக்கிய உறுப்புரிமையை இவருக்கு வழங்குவதுண்டு.

இப்படிப்பட்ட இயக்கங்களின் மூலமாக இவரது ஆலோசனைகள், கட்டுரை, கவிதை, சொற்பெருக்கு உருவத்தில் தமிழ் கொஞ்ச பொருள்விஞ்ச தமிழ்ப்பணியாகப் பெருக்கெடுக்கும். சமூகப்பணி விழா வெளியீடுகள் எதுவாயிருப்பினும் அவ்வெளியீடுகளில் ஆசியுரையிலோ, கட்டுரையிலோ, முன்னுரையிலோ, கவிதைவடிவிலோ பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளையைக் காணலாம்.

இவ்வாறுதான் சமயப்பணி மூலம் தமிழ் வளர்த்தார் தனது சமயசம்பந்தமான சொற்பொழிவுகளிலே தமிழ்ப்புராணங்கள் காப்பியங்கள், சங்கநூற்கள் என்பனவற்றை கேட்போர். எந்நிலையினராக விருப்பினும் நுதலியபொருள் விளங்கத்தக்கதாக சமயத்தின் கோட்பாடுகள் ஆகமப்பொருட்கள் ஆதியன தெற்றெனப் புலப்படப் பேசுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியற் தலைவர்கள் இவரைத் தமது வலைக்குள் வீழ்த்த முயல்வர் ஏனெனில் வாக்காளர்களுடைய மனநிலை அறிந்து நகைச் சுவையும் தமிழ்ச்சுவையுங் கலந்து அரசியற் பேச்சுகளைப் பேசத் தக்கவர் இவரென்பதாலேயே.

இவற்றிலும் மேலாக இவர் இலக்கிய சேவையின் மூலம் தமிழ்ப்பணியாற்றியமை இவரின் மேதாவிலாசத்தை மேலும் மேன்மைப் படுத்தியது. இவரது கன்னி முயற்சியான மண்டூர்ப் பதிகத்தை விபுலானந்த அடிகளாரே வியந்து பாராட்டியுள்ளார். நமக்குத் தொழில் கவிதை என்பதுபோல் இவர் நாவுக்குருசி கவிதை, விபுலானந்த அடிகளார் சுகயீனமுற்றிருந்த போது இவர் யாத்த ''மீட்சிப்பத்து'' தமிழ் அவுடதமாகும். 1944ம் ஆண்டு இவரது பகவற் கீதை வெண்பா வீரகேசரிவார வெளியீட்டில் தொடர்ந்து பிரசுரமானது. இலங்கை வானொலி ''வெண்பா விற் பெரியதம்பி'' எனச்சிறப்பித்தும் கௌரவிக்குமளவுக்கு இவரது கவிவன்மை சிறப்புற்றது.

இவரது கீதை வெண்பா அரங்கேற்றத்தின் போது இவரது சாலைமாணாக்கரும் நண்பருமான கலாநிதி-பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள்

கீதை கவிசெய்து கீர்த்திமிகப் பெற்றான்
ஏபெரியதம்பி எனதன்பன்—ஓதக்கேள்
பாட்டுக்கொரு புலவன் பாரதியென்பர்
பாட்டுக்கு இவன் என்பன் யான் —எனத்தோழமை

கனியப்பாடினார் ஆனால் யானோ
வெண்பாவிற் புகழேந்தி என்பார் இன்றிந்த
தண்பாப் பெரியதம்பி வாயமுதம் உற்று
வெண்பாவிற் பெரியதம்பி எனும்புகழ் நிலைத்திட்டதே
எனப் புகழ்வேன்.

இவருடைய பகவத் கீதை வெண்பா மூன்று தொகுதியாக வெளிவந்துள்ளன. முதலாந் தொகுதி சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது. 1.12.52இல் இது ஆரிய திராவிடப் பாஷாவிருத் திச்சங்க வெள்ளி விழாவின் போது அரங்கேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1643ம் ஆண்டில் கல்முனை விளைவுவிழாவில் "புதுமைக்கமக்காரன்-கிருஷிக ஆத்திசூடி" என்ற விருபாடல்களும் அகிலவிலங்கைக ரதுயல் பரிசு பெற்றன. இவை புத்தகரூபத்தில் வெளியிடப்பட்டன.

இவரது பகவற் கீதை வெண்பாவினை தமிழகத்தின் சமஸ்தானங் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தனது பதிப்பாக வெளியிட்டு புலவர்மணியை தமிழகந் தருவித்துப் பாராட்ட முயற்சிசெய்யும்போதே காலனின் கண்ணூறு அன்னார்மீது பட்டுவிட்டது போலும்.

இலங்கையில் 1626இலிருந்து வெளிவந்துள்ள ஆண்டுமலர்கள், நினைவுவிழா மலர்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றில் எண்பது சதவீதமானவற்றி லிவரது கவிதையோ, ஆசியோ கட்டுரையோ வெளிவந்துள்ளது. இவரது கட்டுரை-முன்னுரை கவிதைகளைத் தாங்கி வெளிவருவது பெரும்பாக்கியமாக ஆக்கியோன் பதிப்பாளர் ஆதியோர்கருதுவது மட்டுமல்ல தயது ஆக்கங்களின் தரத்தை அது உயர்த்துமெனவுங் கருதுனர்.

சிந்தாமணியில் வெளிவந்துள்ள இவரது உள்ளதும் நல்லதும் எனுஞ்சுயவரலாறு "தமிழ்மொழியின் வசனநடை எவ்வாறிருக்கவேண்டுமென்பதற்கு ஒருஇலககண சாதன நூலாகும். வசனஅமைப்பு, பொருட்செறிவு, சொற்தேர்வு என்பவற்றைப் போதிக்கும் வகையிலான ஒரு கட்டுரை இலக்கண நூலாகும்.

மருதமுனை—இஸ்லாமிய இலக்கிய ஆய்வு விழாவில் சமர்ப்பித்த இவரது மஸ்தான் சாகிபு பாடல்பறறிய கட்டுரை இஸ்லாமிய சமய அறிவை வெளிப்படுத்துவதுகட்டுமல்ல முஸ்லீம் மக்களின்பால் கொண்டிருந்த மட்டற்ற மதிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

மன்னர் வளர்த்த மொழி மாநிலமாண்ட மொழி
பன்மொழி வாணர்களும் பாலித்துக் காத்தமொழி
உண்ணும் உணவில் நீரில் உயிரில் இனியமொழி
கண்ணில் சிறந்தநம் கன்னித் தமிழ்மொழி காப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இவர் கவியின் மூலம் உயிரிலும் மேலான தமிழ்மீதுள்ள பற்றை நாம் உணரலாம்.

தீண்டாமைப் பேயை இவர் எந்தரூபத்திலும் வெறுத்தார். ஒருவரை ஒருவர் அடிமை கொள்வதை மிகவும் எதிர்த்தார். ஒரு தடவை பேருந்து வண்டியில் பிரயாணம் செய்யும்போது ஆங்கிலமுறையில் ஆடை அணிந்திருந்த ஒருவருக்கும் தமிழ்ப்பண்பாட்டு முறையில் வேட்டி சால்வை அணிந்திருந்த ஒருவருக்கும் அப்பேருந்து வண்டிப்பிரயாணிகள் கொடுத்த மதிப்பைக்கண்ட அவர் மனம் நொந்து;

முன்னே வழக்கால் முளைத்தயிருசாதிபோய் பின்னே யிருசாதி பிறந்ததுகாண்- அந்தியர்தாம் ஆங்கிலத்தால் மேல்சாதியா யிற்றே தமிழ்மொழி கற்றேங்கி நிற்கும் கீழ்சாதியேஎனப்பாடினர்;

ஆயிரக்கணக்கிலுள்ள இவரது கவிதைகள் இன்சுவை பயப்பன, சில பாடல்கள் பாடசாலைப் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளன. இன்னும் வரவேற்புபசாரப் பத்திரங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொகுத்தால் புலவர்மணி பிரபந்தத்திரட்டு ஒரு இலக்கியக் கருவூலமாகும்.

இவரது தமிழ்-இலக்கியப்பணி மட்டற்றதாய் இலங்கைச்சாகித்திய மண்டலமிருந்து சாதாரண தமிழ் இயக்கங்கள் வரை உறுப்புரிமை, தலைவர் போசகர் எனும் தகை பெறுபணிகளால் விளங்கிற்று. அவரது உடல், தமிழ்- உயிர்- தமிழ் மூச்சும்- தமிழ் அதனல் அவரது வாழ்க்கையே தமிழாயிற்று. தமிழே அவரது வாழ்வாயிற்று. இலங்கை கலைக்கழகம், இலங்கைவானெலி ஆலோசனைப்பகுதி ஆரியதிராவிடப் பாஷாபிருத்திச் சங்கம், சாகித்திய மண்டலம். என்பவற்றின் மூலம் இவர் ஆற்றிய பெரும் பணியால் தமிழ்மொழி நலன் பெற்றது. தமிழர்கள் தலை நிமிர்ந்தனர் என்று துணிந்து கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8 சமய சமூகப்பணி,

பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் அளப்பரிய தொண்டுகளுள் எது உயர்ந்தது எதுசிறந்தது எனக் கணிப்பது மிகவுஞ்சிரமமான காரியமாகும். அதுபோல அவர் செய்தபணிகளுள் எப்பணி பெரிதெனவுங் கூறமுடியாது. ஏனெனில் அவர் எப்பணிகளையுந் தமிழ்ப்பணியுடன் இணைத்து அழகுசெய்தார். இவற்றுள் சமயப்பணி எனும் போது சைவ ஆலயங்கள் தனிப்பட்ட நிலையில் ஓர் தொடர்பற்ற முறையில் இயங்கிவந்தன. இவர் இவற்றின் நிர்வாகம் அபிவிருத்தி அமைப்புஎன்பவற்றை ஒரு முகப்படுத்தக் கூடியதான இந்துசமய அபிவிருத்தி இயக்கங்களை ஆங்காங்கு ஸ்தாபிதம் செய்து அவற்றின்மூலம் ஆலயப் புனரமைப்பு, சமயவழிபாட்டுப் புனரமைப்பு, என்பவற்றிற்கு வழிகாட்டினார். பொதுவாக, கோயில்களில் ஏற்படும் பிரச்சினை பூசல்களைத் தீர்க்க அரசாங்கம் இவரின் உதவியை நாடுவதுண்டு. நடுவராக நின்று ஆலயங்கள் சரிவர இயங்கச் செய்த சம்பவங்கள் அநேகம், விபுலானந்த அடிகளாரின் வழிநின்று அவர்பணியைத் தொடர்ந்து சமயவிரிவுரை- சமயவகுப்புகள்- என்பவற்றின்மூலம் நடாத்தி வந்தார்.

1938ம்ஆண்டில் ஈழகேசரி ஆண்டுமடலில் 'ஈழமணித்திருநாடெங்கள் நாடே' என்றபாட்டின் மூலம் தேசியஇன ஒற்றுமையை வலியுறுத்தினார். அக்காலகட்டம் சுதேசப் போராட்டக் காலமாகும். ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்திலீடுபட்டு கலாநிதி என். எம். பெரேரா- ஆகிய தேசியப் போராட்டத் தலைவர்கள் சிறைப்பட்ட காலமாகும். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பேசுவது, எழுதுவது இராசத்துரோகமாக இருந்தகாலத்திலேயே. புலவர்மணியவர்கள் அஞ்சாநெஞ்சத்தினராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிமைத்தளையகன்றால் இன்பவீடே என முழக்கமிட்டு ''ஈழமணித்திரு'' பாட்டினை யாத்து வெளியிட்டார். இதிலிருந்தே இவர் ஒரு தேசியக்கவிமாத்திரமல்ல பாரதியாருக்கு நிகரான தேசபக்தரும்கூட.

தேசவழமைச் சட்டத்தில் மட்டக்களப்பு மக்களின் பாரம்பரியம் பற்றிய இவரது நீதிமன்றத்தில் கொடுத்த சாட்சியங்களைத் தொகுத்தாலே ஒரு பெருந் தொகுதிமட்டுமல்ல தமிழ் இலக்கியம்- பண்பு- நீதி என்பவை கலந்த பொக்கிசமுமாகும். அரசியல் துறையில் 1935ம் வருடத்தில் திரு. எஸ். ஓ. கனகரெத்தினம் என்பாரோடு தொடர்பு கொண்டு உழைத்தார். அதன் பின்னர் இவரது வாழ்க்கையில் அரசியற்பணியும் ஓரம்சமாயிற்று.

அதன்பின்பு அரசியலில் ஒரு மறைமுகமான- ஆனால் பயன்தரத்தக்க அரசியற் தொடர்புடைய ஆலோசகராக மட்டக்களப்பு மாவட்டத்தில் விளங்கினார். பூராடனார் எழுதிய எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் முதலாம் பாகத்தில் பட்டிருப்புதொகுதியின் அரசியலில் புலவர்மணி எவ்வளவு முக்கியத்துவம் வகித்தார் என்பது விளங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு இயக்கம் கிழக்குமாகாணத்தில் உருவாக உழைத்தார். கூட்டுறவுச் சம்மேளனத்தில் பலமுக்கிய பதவிகளை வகித்து மட்டக்களப்பு மக்களின் வாழ்வில் கூட்டுறவு இயக்கம் நிலைக்கப்பாடுபட்டார்.

புலவர் மணியின் வாழ்நாள் முழுவதும் தேசிய ஒற்றுமைஎனு அடிப்படையிலே தனதுஅரசியற்கொள்கைகளை வகுத்துச் செயற்பட்டார். ஆயினும் 1972க்குப்பின்னர்கூட்டணி உருவானதுந்தனதுகொள்கையை அதற்கேற்ப அமைத்துக் கொண்டார் தமிழ்க்காங்கிரஸ் ஆரம்ப உறுப்பினராக இருந்து இறுதிவரை அமரர் ஜி ஜி பொன்னம்பலம் அவர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கரிய செய்தார். சமூகத்தின் சேவையே தனது குறிக்கோள் என வாழ்ந்தார். இதன் பேருக சமாதான நீதவான் பதவி இவருடைய தன்னலமற்ற சேவையை அணிசெய்தது.



## 9 நீங்காத நினைவுகள்

கல்கி அவர்கள்—தனது கல்கிப் பத்திரிகையில் செந்தமிழ்சுவை நனிசொட்டத் தேனினுமினிய பாடல்களைப் பொழியுந் திறனுளன் எனப் போற்றப்பட்ட புலவர்மணி அவர்களின் வாழ்நாள் முழுதும் நடந்நசம்பவங்கள் அனைத்தும் தமிழுலகத்தில் நீங்காத நினைவுகளே. காலயுத்திஹு1978 ஆண்டு; கார்த்திகை மாதம் இரண்டாந் திகதி காலை புலவர்மணி அவர்கள் தனது பேரனை திலீபனுடன் பேசிக்கொண்டிருந்தார். திலீபன் சற்று நேரம விளையாட வெளியேபோய் திரும்பி வருவதற்குள் அவர் எவ்வித வேதனையுமின்றிப் பரமபதமடைநதார். இது அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல கிராமத்திற்கு மட்டுமல்ல மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மட்டும்ல்ல தமிழபேசும் நல்லுலகமெங்கும நீங்காத நினைவாகிவிட்டது. தமிழுக்காக வாழ்ந்து தமிழன்னையின் மடியில் நீங்காத துயில் கொண்ட புலவர்மணியின் பணிகள் நீங்காத நினைவுகளேயாகும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிமுகம்.

சதா. நவரெட்ண ராஜா

தந்தையார் பண்டிதர்
சபா. சதாசிவஐயர் [நல்லூர்)

தாயார் கந்தப்பர் தங்கமுத்து
(குருக்கள்மடம்.)

பிறந்த திகதி 14.5.48

ஆரம்பக்கல்வியை குருக்கள்மடம் மெதடிஸ்த பாடசாலையில் கற்று 5ம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் தேறி, வந்தாறுமூலை மகாவித்தியாலயம் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்றவர். சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவன்.

கட்டிடத் திணைக்களத்தில் சிறு வேலைப்பார்வையாளராகவும், பட்டிருப்பு அபிவிருத்திச்சங்க வேலை மேற்பார்வையாளராகவும், கொழும்பு. மருதானை தொழில் நுட்பக்கல்லூரி போதனாசிரியராகவும் கடமையாற்றியவர். இப்போது இலங்கை நிர்மாணப பொறியியலாளர் ஸ்தாபனத்தில் வேலை மேற்பார்வையாளராக கடமையாற்றுமிவர் குருக்கள்மடம் இந்து அபிவிருத்திச் சங்கச்சபை துணைச் செயலாளராகவும் வசந்த கலை அரங்கச்செயலாளராகவும், கலைவாணி வித்தியாலய அபிவிருத்திச் சபை செயற்குழு உறுப்பினராகவும் தொண்டாற்றுகிறார்.

முன்னணிக் கவிஞன், பேச்சாளன், எழுத்தாளனை 'குருநகர்க் குமரனை' நூலாசிரியராக அறிமுகப்படுத்துகிறோம்

—பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org